**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**தேதி: 21.01.2026**

**OS. No. 36/2016**

**வழக்கு சாட்சி DW.1– மோகினி, க/பெ. பிரகாஷ்**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நானும், எனது கணவர் பிரகாஷ் என்பவரும் கேரளா மாநிலத்தை பூர்விகமாக கொண்டவர்கள் என்றால் சரிதான். நான் பூம்பாறை கிராமத்தில் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல , 40 வருடங்களாக அங்குதான் நான் வசித்து வருகிறேன் . தாவா சொத்தின் பட்டா கூட்டுப்பட்டாவாக உள்ளது, 14 நபர்கள் பெயரில் உள்ளது . அந்த 14 நபர்கள் பெயரில் வாதி வேலுச்சாமி பெயரும் உள்ளது என்றால் சரிதான் . வாதி வேலுச்சாமி பதிவு செய்த உடன்படிக்கை ஆவணம் எதுவும் எனக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான் . நானும், எனது கணவர் பிரகாஷ் மற்றும் 3ம் பிரதிவாதி , வாதி சொத்தை அபகரிக்க முயற்சி செய்கிறோம் என்றால் சரியல்ல . வழக்கு தாவா சொத்தை நாங்கள் அபகரிக்க முயன்றது தொடர்பாக வாதி வேலுச்சாமி கொடைக்கானல் காவல்நிலையத்தில் புகார் ஒன்று கொடுத்தார் என்றால் சரியல்ல. வாதி கொடுத்த புகாரின் அடிப்படையில் என் மீது கொடைக்கானல் காவல்நிலையத்தில் குற்ற எண்.131/2015, பிரிவுகள் 294(b), 323, 506(2) இ.த.ச. வின் கீழ் குற்ற வழக்கு பதியப்பட்டது என்றால் சரியல்ல . தாவா சொத்தின் சர்வே எண் .424/14 ( சாட்சி வழக்கு சங்கதிகளை கையில் எழுதி வைத்து அதைப்பார்த்து சாட்சியம் அளித்தார் ). தாவா சொத்தானது மூன்றே கால் சென்ட் நிலமாகும்.

**(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை தொடர்ச்சி வைக்கப்படுகிறது )**

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.01.21 17:44:54 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.